museum of modern
and contemporary art
sri lanka

Regional Friendships Newsletter– April 2023

**பிராந்திய நட்புறவைக் கட்டியெழுப்புதல்**

எங்கள் எடுத்தாளுனர் குழுவிலிருந்து சந்தேவ் ஹன்டி மற்றும் ரிசெல் மார்சலின் ஆகிய இருவர், ஜனவரி 10ம் திகதி முதல் பெப்ரவரி 6ம் திகதி வரை சிங்கப்பூர் கலை அருங்காட்சியகத்தில் (SAM) நடைபெற்ற EX-SITU: Art Spaces Residencyக்காக சிங்கப்பூர் சென்றதுடன் 2023ம் ஆண்டினை ஆரம்பித்தோம்.

எங்கள் தலைமை எடுத்தாளுனர், ஷாமினி பெரேரா, மற்றும் அபிவிருத்தி உதவியாளரான ஒனெலா பெரேரா ஆகியோர், MMCA இலங்கையின் ஸ்தாபக புரவலர்களின் குழுவுடன் பெப்ரவரி மாதம் புதுதில்லியில் நடந்த India Art Fair மற்றும் Asia Arts Game Changer Awards 2023க்குச் சென்றனர். புரவலர்களின் சுற்றுப்பயணத்தின்போது, அவர்கள் கிரண் நாடர் கலை அருங்காட்சியகம் மற்றும் KHOJ உட்பட பல கலை மற்றும் கலாச்சார நிறுவனங்களையும், இந்திய கலை புரவலர்களின் தனிப்பட்ட கலைத் தொகுப்புகள் மற்றும் குடியிருப்புகளையும் சென்று பார்வையிட்டனர். இவ்வாண்டில் இன்னும் சில சர்வதேச கலைப் பயணங்கள் நடைபெறும் என எதிர்பார்க்கிறோம்!

இந்தியாவின் பெங்களூரிலுள்ள கலை மற்றும் புகைப்பட அருங்காட்சியகம் (MAP) ஆனது, 2023 மார்ச் மாதம், 24 முதல் 25 வரை ஏற்பாடு செய்த ‘Beyond Theory: Mapping Feminist Practices in the Contemporary’ என்ற மாநாட்டில், MMCA இலங்கையின் கல்விக்கும் பொது நிகழ்ச்சிகளுக்குமான உதவி எடுத்தாளுநர், பிரமோதா வீரசேகர, சிறப்புரை வழங்கினார்.

**முன் நோக்கியும் மேல் நோக்கியும்**

Groundfloor, Crescat Boulevard
89 Galle Road
Colombo 03

Registered Address:
117 Sir Chittampalam A. Gardiner Mawatha
Colombo 02
Sri Lanka

info@mmca-srilanka.org
www.mmca-srilanka.org

ஜனவரியிலிருந்து மார்ச் மாதம் வரை MMCA இலங்கை நடத்திய MMCA Afterschoolஇன் 2வது மற்றும் 3வது தவணைகளில் 60 பிள்ளைகள் பங்கேற்று, அம்முயற்சி வெற்றிகரமாக நடந்தது.

எங்களுடைய முதலாவது எழுத்துப் பயிற்சிப் பட்டறையை கன்யா டி'அல்மெய்டாவுடன், மார்ச் 4 முதல் 12 வரை நான்கு அமர்வுகளின் தொடராக நடத்தினோம். இந்த பட்டறையானது, தனிப்பட்ட ரீதியாக மற்றும் அரசியல் பற்றி எழுதுவதற்கு வழிகாட்டுதல் மற்றும் உத்வேகம் நாடும் அனைத்து (வெவ்வேறு நிலைகளிலுள்ள மற்றும் வகைகளில் எழுதும்) எழுத்தாளர்களுக்கும் ஒழுங்கமைக்கப்பட்டது. இப்பட்டறையில் பங்கேற்ற 13 எழுத்தாளர்கள், 'சந்திப்புகள்' கண்காட்சியின் 3வது சுழற்சியில் காட்சிப்படுத்தப்பட்ட கலைப்படைப்புகளுக்கு எழுத்து மூலம் பதிலளிக்கும் வகையில், தமது எழுத்தாற்றலை வளர்த்துக்கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. பங்கேற்பாளர்களின் எழுத்தாக்கங்களுக்காக ஆவலுடன் காத்திருங்கள்!

மார்ச் 19ம் திகதியன்று 'சந்திப்புகள்' என்று தலைப்பிடப்பட்ட எமது இரண்டாவது கண்காட்சி முடிவடைந்தது. 20,866 வருகையாளர்களால் பார்க்கப்பட்ட இக்கண்காட்சியானது, பல புதிய பார்வையாளர்களுக்கு எங்கள் பணியைக் கொண்டு செல்லவும், எமது அருங்காட்சியகம் க்ரெஸ்கட் புலவார்டில் இருப்பதை நிலைநிறுத்தவும் உதவியது. எங்கள் தலைமை எடுத்தாளுனரான ஷாமினி பெரேரா, மற்றும் எடுத்தாளுனரான சந்தேவ் ஹன்டி ஆகியோரால் நிர்வகிக்கப்பட்ட 'சந்திப்புகள்', மூன்று தொடர்ச்சியான சுழற்சிகளாக நடத்தப்பட்டது. மேலும், இலங்கை மற்றும் பெர்லினில் இருந்து 15 கலைஞர்களின் 59 கலைப்படைப்புகளை (கடனுக்கு பெறப்பட்டவை) இக்கண்காட்சியில் காணக்கூடியதாக இருந்தது. இக்கண்காட்சியில் இருந்த கலைப்படைப்புகளைப் பற்றிய மேலதிக தகவல்களை எமது இணையதளத்தில் விரைவில் கண்டறியலாம். 'சந்திப்புகள்' வெற்றிபெறப் பங்களித்த கலைஞர்கள், கடன் வழங்குபவர்கள் மற்றும் நிதியளித்த அனைவருக்கும் நன்றி!

Selyn மற்றும் Selyn Foundation உடன் இணைந்து, பெண்களுக்கு கலாச்சார தொழில்முனைவு, தலைமைத்துவ மேம்பாடு மற்றும் நிதி முகாமைத்துவ திறன்களையும் வாய்ப்புகளையும் வழங்குவதற்கான நிதி திரட்டும்

முயற்சியையும் MMCA இலங்கை ஆரம்பித்தது. இவ் ஒத்துழைப்பின் மூலம், Design for Impact இன் ஒரு அங்கமாக, ஜோர்ஜ் கீட் (1901–1993) இன் இரண்டு ஓவியங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள சாரங்கள் மற்றும் கழுத்தில் அணியும் தாவணிகளின் வரையறுக்கப்பட்ட பதிப்புத் தொடர் ஒன்று அறிமுகப்படுத்துகிறது. கையால் வடிவமைக்கப்பட்டுள்ள தனித்துவமான இத்துணி வகைகளை அனைத்து கலை ஆர்வலர்களும் பெற்றுக்கொள்ள வேண்டும்! நீங்கள் ஒன்றைப் பெற விரும்புகிறீர்களா? முகநூல் அல்லது இன்ஸ்டகிராமில் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

'அந்நியர்' என்ற தலைப்பில் எங்கள் அடுத்த கண்காட்சியானது, மே மாதம் 4ம் திகதியன்று திறந்துவைக்கப்படும் என்பதை அறிவிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். சந்தேவ் ஹன்டி மற்றும் ஷாமினி பெரேரா ஆகியோரால் நிர்வகிக்கப்படும் இந்த கண்காட்சியில், இது சமகால கலைஞர்களை மையமாகக் கொண்டிருக்கும். மேலும், இக்கண்காட்சியானது, ஓவியங்கள், புகைப்படங்கள், நாடக நிகழ்ச்சிகள், வீடியோ கலைப்படைப்புகள் மற்றும் வரைபடங்கள் என 16 கலைப்படைப்புகளை ஒன்றிணைக்கும். உங்கள் நாட்குறிப்புகளில் இதனைக் குறித்துக் கொள்ளவும். உங்களைப் பார்க்க ஆவலுடன் காத்திருக்கிறோம்!

4மே 2023ல் தொடங்கவிருக்கும் எமது அடுத்த கண்காட்சியை ஒழுங்கு செய்வதற்காக, நவீன மற்றும் சமகால கலைக்கான இலங்கை அருங்காட்சியகம் தற்பொழுது மூடப்பட்டுள்ளது.